1981 ஏப்ரல் 30] [திரு. ப. நெடுமாறன்]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மதிப்பிற்குரிய பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது வெல்லம் காய்ச்சுவதைக் குடிசைத் தொழிலாக அவர் கருதி விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்திருக்கிறார்கள். வெல்லம் காய்ச்சுவதை விவசாயிகள் குடிசைத் தொழிலாகத்தான் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான் விவசாயிகள் கரும்புப் பயிரிடுகிற விவசாயிகள், ஆலைகளுக்குக் கரும்பு அளிப்பதனாலே இலாபம் இல்லையென்று சொல்லி, அவர்கள் வெல்லம் காய்ச்சி விற்கக்கூடிய ஒரு நிலைமையில் அவர்களுக்கு அதிக ஆதாயம் இருந்துகொண்டிருக்கிற இந்த வேளையில், அதைக் குடிசைத் தொழிலாகக் கருதி, நம்முடைய அமைச்சர் அவர்கள் விவசாய . . . .

3. அறிவிப்பு.

அவையில் நடைபெற்ற ஒரு சம்பவம் குறித்த பிரச்சினை உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று 29-4-1981 அன்று பேரவையில் நடந்த சம்பவங்களைக் குறித்து ஆளும் கட்சி தரப்பில் இருந்தும் எதிர்க்கட்சி தரப்பிலிருந்தும் புகார்க் கடிதங்கள் வந்துள்ளன. அவற்றில் கூறப்பட்டுள்ள பொருட்களைப்பற்றி ஆய்வு செய்து முடிவெடுக்க வேண்டியுள்ளதால், இதைப் பற்றி இரு தரப்பினராலும் கொடுக்கப்பட்டுள்ள கடிதங்கள் அதில் குறிப்பிடப் பட்டுள்ள சம்பவங்கள் பற்றியும் பேரவை விதி 255-ன்கீழ் எனக்குக் கொடுக்கப் பட்டுள்ள தனி அதிகாரத்தின்கீழ் இப்பிரச்சினையை விசாரித்து பேரவைக்குத் தனது பரிந்துரைகளைக் கொடுக்க உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன். இப்பிரச்சினை உரிமைக் குழுவிற்கு அனுப்பப்படுவதால் அவைக் குறிப்பில் குழப்பம் ஆரம்பித்த பிறகு பதிவான குறிப்புகள் அப்படியே இருக்கும் என உத்தரவிடுகிறேன்.

2. வரவு-செலவுத் திட்டம்—1981-82 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி).

திரு. ப. நெடுமாறன் : (தொடர்ச்சி) ஆகவே, வெல்லம் காய்ச்சுவதைக் குடிசைத் தொழிலாகக் கருதி, வெல்லத்திற்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று நான் நம்முடைய அமைச்சரை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.